## <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (12.10.2018) ஆம் நாள் வெள்ளி கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** | இந்நகராட்சிக்கு சொந்தமான 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டிராக்டர் எண். டிசியு 9465 வண்டி மூலம் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் இல்ல விசேஷ காலங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு குடிநீர் தேவையின்போது நாளது தேதி வரை ஒரு லோடு நடை ஒன்றுக்கு ரூ. 200/– வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இந்நகராட்சிக்கு வழங்கி வரும் குடிநீருக்கான கட்டணத்தினை இருமடங்காக உயர்த்தியுள்ளதாலும், வருடாந்திர பராமரிப்பு செலவினங்களை கருத்தில் கொண்டு இந்நகராட்சி குடிநீர் டிராக்டர் மூலம் வழங்கும் குடிநீர் கட்டணத்தினை ஒரு லோடு ரூ. 200/– லிருந்து ரூ. 450/– ஆக உயர்த்தி 01.10.2018 முதல் அமுல்படுத்தி வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1741/2015/இ2) |
| **2.** | இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி மெயின் ஆரம்ப பள்ளியின் கணினி அறையின் மேற்கூரை பகுதி இடிந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் பயிலும் மாணவர்களுக்கு ஆபத்தான நிலை ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, அப்பள்ளி வளாகத்தில் உள்ள கணினி அறையின் சேதமடைந்த நிலையில் உள்ள மேற்கூரையினை அகற்றிவிட்டு புதிதாக மேற்கூரை அமைத்திடவும், கதவு, சன்னல் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பழுதுபார்ப்பு மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9,80,000/–க்கும், அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1938–10/2018/இ1) |
| **3.** | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் 33 இடங்களில் பெறுநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) / தனியார் மூலமாக சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்திட விருப்பம் தெரிவித்தல் தொடர்பான விளம்பர அறிவிப்பினை தேனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் வெளியீட்டு ஆணை எண்.984/2018/செ.ம.தொ.அ/தேனி/ நாள்.08.10.2018 வழியாக தினசங்கு நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ.14500/– அய் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| **4.** | நகர்மன்றத் தீர்மானம் எண். **1576** நாள்.31.08.2018 இன் படி, அரசாணை (எம்.எஸ்) எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 20555/2018/ஆர்1நாள்:20.08.2018 வழிகாட்டுதல்களின்படியும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% ற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% க்கு மிகாமலும் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள தெருக்கள் அமைவிடத்தினை கீழ்கண்டவாறு மூன்று மண்டலங்கலாக (A,B,C) பிரிக்கப்பட்டு அதற்கான மண்டல மதிப்பு நிர்ணயம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் அறியும் வகையில் 12.09.2018 மாலைமலர் நாளிதழிலும், அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் மண்டலவாரியான தெருக்கள் பிரிக்கப்பட்டமைக்கும், மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கும் ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கம்பம் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது தற்போது 30 தினங்களுக்கு மேலாகியும் பொதுமக்கள் மற்றும் இதர தொழில் நிறுனங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் வரப்பெறவில்லை. எனவே நகர எல்லைக்குட்பட்ட 33வார்டுகளில் உள்ள கட்டிடங்களுக்கு அரசு வழிகாட்டுதலின்படி 01.04.2018 முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பு மற்றும் பிரிக்கப்பட்ட மண்டலங்களை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

**<u>மண்டல அடிப்படை மதிப்பு விவரம்</u>**

| **மண்டலம்** | **சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு** | |
|---|---|---|
| | **01.04.2018க்கு முன் உள்ள சதுரடிக்கான அடிப்படை மதிப்பு** | **01.04.2018க்கு பின் உள்ள சதுரடிக்கான அடிப்படை மதிப்பு** |
| A | ரூ 1.25 | **1.75** |
| B | ரூ 0.85 | **1.20** |
| C | ரூ 0.45 | **0.85** |

**Zone A**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண்.3 | எல்.எப்.ரோடு |
| 2 | வார்டு எண்.4 | எல்.எப்.ரோடு |
| 3 | வார்டு எண்.5 | எல்.எப்.ரோடு |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு எண்.17 | எல்.எப்.ரோடு |
| 5 | வார்டு எண்.18 | எல்.எப்.ரோடு |
| 6 | | ஒடைக்கரைத் தெரு |
| 7 | வார்டு எண்.20 | எல்.எப்.ரோடு |
| 8 | | மாரியம்மன் கோவில் தெரு (1 to13) |
| 9 | வார்டு எண்.21 | வேலப்பர் கோவில் தெரு |
| 10 | வார்டு எண்.22 | தியாகி வெங்கடாசலம் தெரு |
| 11 | | எல்.எப்.ரோடு |
| 12 | | போர்டு ஸ்கூல்தெரு |
| 13 | வார்டு எண்.23 | காந்திஜி தெரு |
| 14 | வார்டு எண்.27 | எல்.எப்.ரோடு |
| 15 | வார்டு எண்.30 | எல்.எப்.ரோடு |
| 16 | வார்டு எண்.31 | எல்.எப்.ரோடு |

**B-Zone**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண். 1 | ஜல்லிக்கட்டு தெரு |
| 2 | | குமராண்டி தெரு |
| 3 | | மந்தையம்மன் கோவில் மேற்கு தெரு |
| 4 | | நேருஜி தெரு |
| 5 | | கோம்பை ரோடு |
| 6 | | சுவாமி விவேகானந்தர் தெரு |
| 7 | வார்டு எண்.2 | சுவாமி விவேகானந்தர் தெரு |
| 8 | | உலகத்தேவர் 1வது தெரு |
| 9 | | உலகத்தேவர் 2வது தெரு |
| 10 | வார்டு எண்.3 | குரங்குமாயன் தெரு |
| 11 | | உலகத்தேவர் 1வது சந்து |
| 12 | | உலகத்தேவர் 2வது சந்து |
| 13 | | உலகத்தேவர் 3வது சந்து |
| 14 | | உலகத்தேவர் 4வது சந்து |
| 15 | | உலகத்தேவர் 5வது சந்து |
| 16 | | உலகத்தேவர் 6வது சந்து |

| | | |
|---|---|---|
| 17 | | உலகத்தேவர் 7வது சந்து |
| 18 | | உலகத்தேவர் 8வது சந்து |
| 19 | | உலகத்தேவர் 9வது சந்து |
| 20 | | உலகத்தேவர் 10வது சந்து |
| 21 | வார்டு எண்.4 | ஐசக் போதகர் தெரு |
| 22 | | ஓடைத்தெரு |
| 23 | | செல்லாண்டியம்மன் கோவில் தெரு |
| 24 | | நாட்டாண்மை சுருளி தெரு |
| 25 | | மாரியப்பன் சந்து |
| 26 | | கே.கே.பட்டி ரோடு |
| 27 | வார்டு எண்.5 | குரங்குமாயன் தெரு |
| 28 | | சுவாமி விவேகானந்தர் தெரு |
| 29 | | காளியம்மன் கோவில் தெரு |
| 30 | | வள்ளுவர் தெரு |
| 31 | | பிள்ளையார் கோவில் தெரு |
| 32 | வார்டு எண்.6 | ஜல்லிகட்டு தெரு |
| 33 | | கருப்பசாமி கோவில் தெரு |
| 34 | | மந்தையம்மன் கோவில் தெரு |
| 35 | | மந்தையம்மன் கோவில் தெற்கு தெரு |
| 36 | | மந்தையம்மன் கோவில் கிழக்கு 1வது சந்து |
| 37 | | மந்தையம்மன் கோவில் கிழக்கு 2வது சந்து |
| 38 | | மந்தையம்மன் கோவில் மேற்கு சந்து |
| 39 | வார்டு எண்.7 | குரங்குமாயன் தெரு |
| 40 | | நேருஜி தெரு |
| 41 | | சமையன் தெரு |
| 42 | | ஜீவானந்தம் தெரு |
| 43 | வார்டு எண்.8 | ஆங்கூர் தெரு |
| 44 | | செக்கடி தெரு |
| 45 | | உமர்பாட்சா தெரு |
| 46 | | தாத்தப்பன்குளம் 14வது சந்து |

| | | |
|---|---|---|
| 47 | | தாத்தப்பன்குளம் 15வது சந்து |
| 48 | | தாத்தப்பன் கோவில் தெரு |
| 49 | | கோம்பை தெரு |
| 50 | | கோம்பை ரோடு |
| 51 | | கோம்பை சந்து |
| 52 | | தியாகி முகமது அலி ஜின்னா தெரு |
| 53 | | தியாகி பீர்முகமது பாவலர் தெரு |
| 54 | | மியாக்கான் தெரு |
| 55 | | ஜல்லிக்கட்டு தெரு |
| 56 | | சுப்பிரமணியசாமி கோவில் தெரு |
| 57 | வார்டு எண்.9 | தாத்தப்பன்குளம் 11வது சந்து |
| 58 | | தாத்தப்பன்குளம் 12வது சந்து |
| 59 | | தாத்தப்பன்குளம் 13வது சந்து |
| 60 | | சுப்பிரமணியசாமி கோவில் தெரு |
| 61 | | தாத்தப்பன்குளம் 1வது சந்து |
| 62 | வார்டு எண்.10 | தாத்தப்பன்குளம் 2வது சந்து |
| 63 | | தாத்தப்பன்குளம் 3வது சந்து |
| 64 | | தாத்தப்பன்குளம் 4வது சந்து |
| 65 | வார்டு எண்.11 | கம்பம் மெட்டு ரோடு |
| 66 | | தாத்தப்பன்குளம் 10வது சந்து |
| 67 | | தாத்தப்பன்குளம் 16வது சந்து |
| 68 | | தாத்தப்பன்குளம் 17வது சந்து |
| 69 | | தாத்தப்பன்குளம் 18வது சந்து |
| 70 | வார்டு எண்.12 | தாத்தப்பன்குளம் 5வது சந்து |
| 71 | | தாத்தப்பன்குளம் 6வது சந்து |
| 72 | | தாத்தப்பன்குளம் 7வது சந்து |
| 73 | | தாத்தப்பன்குளம் 8வது சந்து |
| 74 | | தாத்தப்பன்குளம் 9வது சந்து |
| 75 | வார்டு எண்.13 | சுங்கம் தெரு |
| 76 | | புலவர் தெரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 77 | | பத்ரகாளியம்மன் கோவில் தெரு | |
| | 78 | | மைதீன் ஆண்டவர்புரம் 1வது தெரு | |
| | 79 | | மைதீன் ஆண்டவர்புரம் 2வது தெரு | |
| | 80 | | கம்பம் மெட்டு ரோடு | |
| | 81 | | தாத்தப்பன்குளம் 19வது சந்து | |
| | 82 | வார்டு எண்.14 | நந்தகோபால்சுவாமி கோவில் 1வது தெரு | |
| | 83 | | நந்தகோபால்சுவாமி கோவில் 2வது தெரு | |
| | 84 | | நந்தகோபால்சுவாமி கோவில் 3வது தெரு | |
| | 85 | | நந்தகோபால்சுவாமி கோவில் தெரு | |
| | 86 | | பத்திரகாளியம்மன் கோவில் தெரு | |
| | 87 | | சன்னாசி தெரு | |
| | 88 | | பாப்பச்ச தெரு | |
| | 89 | | ஓடைக்கரை தெரு | |
| | 90 | வார்டு எண்.15 | சின்ன மலுக்கர்ணன் தெரு | |
| | 91 | | பள்ளிவாசல் 1வது தெரு | |
| | 92 | | நொண்டி மகன் தெரு | |
| | 93 | | குளக்காரன் தெரு | |
| | 94 | | பள்ளிவாசல் 2வது தெரு | |
| | 95 | | சுங்கம் தெரு | |
| | 96 | | நாட்டாமை நாராயணசாமி தெரு | |
| | 97 | | ஓடைகரை தெரு | |
| | 98 | வார்டு எண்.16 | ஏ.எம்.சர்ச் தெரு | |
| | 99 | வார்டு எண்.17 | நாட்டாண்மை அழகிரி தெரு | |
| | 100 | | தாத்தப்பன் கோவில் தெரு | |
| | 101 | | டாக்டர் அம்பேத்கார் தெரு | |
| | 102 | வார்டு எண்.18 | செக்கடி தெரு | |
| | 103 | | மஞ்சனக்கார தெரு | |
| | 104 | | அன்பிற்பிரியாள் கோவில் தெரு | |
| | 105 | | அபுபக்கர் மஸ்தான் தெரு | |
| | 106 | | சங்கரலிங்கம்பிள்ளை தெரு | |

| | | |
|---|---|---|
| 107 | வார்டு எண்.19 | கம்பராயப்பெருமாள் கோவில் தெரு |
| 108 | | வரதராஜபுரம் 2வது நடுத்தெரு |
| 109 | | வரதராஜபுரம் கிழக்கு தெரு |
| 110 | | தியாகராஜ பாகவதர் 1வது தெரு |
| 111 | | தியாகராஜ பாகவதர் 2வது தெரு |
| 112 | வார்டு எண்.20 | கம்பராயப்பெருமாள் கோவில் தெரு |
| 113 | | மாரியம்மன் கோவில் தெரு 14 to **65** |
| 114 | | கொண்டி தொழு தெரு |
| 115 | | சோலைமலைத்தெரு |
| 116 | வார்டு எண்.21 | அப்பாவு தெரு |
| 117 | | விஸ்வநாதன் தெரு |
| 118 | | மணியக்கார தெரு |
| 119 | | குட்டியா தெரு |
| 120 | | கிளைதாங்கி தெரு |
| 121 | வார்டு எண்.22 | வெங்கிட்டன் சந்து |
| 122 | | பழனிகுமார் சந்து |
| 123 | | அப்பாவு தெரு |
| 124 | | தேவாங்கர் தெரு (சௌடம்மன் கோவில் தெரு) |
| 125 | | தியாகி பாரதி நாராயணசாமி தெரு |
| 126 | வார்டு எண்.23 | ராமையன் சந்து |
| 127 | | டேகண தெரு |
| 128 | | பஜார் தெரு |
| 129 | | என்.கே.பி.ராஜு தெரு |
| 130 | | பூசாரி முத்தையா தெரு |
| 131 | | இராமையன் தெரு |
| 132 | வார்டு எண்.24 | என்.கே.பி.ராஜு தெரு |
| 133 | | கஞ்சையம்மன் கோவில் தெரு |
| 134 | வார்டு எண்.25 | ஆலமரத்து 1வது தெரு |
| 135 | | மத்துலு தெரு |
| 136 | | கூழ் அண்ணன் தெரு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 137 | | நந்தகோபால்சாமி தெற்கு தெரு | |
| | 138 | | நந்தகோபால்சாமி தெரு | |
| | 139 | வார்டு எண்.26 | குளத்து தெரு | |
| | 140 | | ராமையன் 2வது தெரு | |
| | 141 | | ராமையன் 1வது தெரு | |
| | 142 | | முத்து காமன் சந்து | |
| | 143 | | ஒச்சாத்தேவர் சந்து | |
| | 144 | | காளியம்மன் கோவில் தெரு | |
| | 145 | | ஆலமரத்து 2வது தெரு | |
| | 146 | | பிள்ளையார் கோவில் மேற்கு தெரு | |
| | 147 | வார்டு எண்.27 | பார்க் ரோடு | |
| | 148 | | பார்க் ரோடு 1வது சந்து | |
| | 149 | | பார்க் ரோடு 2வது சந்து | |
| | 150 | | பார்க் ரோடு 3வது சந்து | |
| | 151 | | பார்க் ரோடு 4வது சந்து | |
| | 152 | | பார்க் ரோடு 5வது சந்து | |
| | 153 | | பார்க் ரோடு 6வது சந்து | |
| | 154 | | பார்க் ரோடு 7வது சந்து | |
| | 155 | | போர்டு ஸ்கூல் சந்து | |
| | 156 | வார்டு எண்.28 | கணபதி அக்ரஹாரம் தெரு | |
| | 157 | | வரதராஜபுரம் நடுத்தெரு | |
| | 158 | | கிராமச்சாவடி தெரு | |
| | 159 | | கிராமச்சாவடி சந்து | |
| | 160 | | சின்னவாய்க்கால் தெரு | |
| | 161 | வார்டு எண்.29 | ரேஞ்சர் ஆபீஸ் ரோடு | |
| | 162 | வார்டு எண்.30 | பார்க் ரோடு 8வது சந்து | |
| | 163 | | எல்.எப்.ரோடு | |
| | 164 | வார்டு எண்.31 | சுக்காங்கல்பட்டி ரோடு | |
| | 165 | வார்டு எண்.32 | சிலப்பதிகார தெரு | |
| | 166 | | சுக்காங்கல்பட்டி தெரு | |

| | | |
|---|---|---|
| 167 | வார்டு எண்.33 | பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு |
| 168 | | நெல்லுக்குத்தி புளியமரத்தெரு |

**C-Zone**

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண். 11 | கம்பம் மெட்டு காலனி |

**அலுவலகக் குறிப்பு :-** 01.04.2018 முதல் பொது சொத்துவரிச் சீராய்வு மேற்கொள்ளவும், மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது குறித்தும் ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் தெரிவிக்கக்கோரி 12.09.2018 அன்று தினசரி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டு 30 தினங்கள் முடிவடைந்த நிலையில் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் வரப்பெறாத காரணத்தினால் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2828 /2018/அ1)**

**5.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 12981/2018/இ3 நாள். 31.07.2018 ன் படி, இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் (TURIP) திட்டம் 2018–19 –இன் கீழ் தார் சாலை, பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்திட சிப்பம்–1க்கு **ரூ.200.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| சிப்பம் எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| I | வார்டு எண். 3 வாரச்சந்தை, வா. எண். 20 கம்பராயப் பெருமாள் கோவில் தெரு, வரதராஜபுரம் கொண்டித்தொழு தெரு, வார்டு எண். 28, கிராமசாவடி தெரு, சின்னவாய்க்கால் ரோடு, வா. எண். 31, காந்திநகர் குறுக்குத் தெரு, கக்கன் காலனி மெயின் ரோடு மற்றும் நகராட்சி பார்க் தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல் | 200.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நகர்மன்றத்தீர்மானம் எண். 1531, நாள்.29.06.2018 ன்படி, மன்ற அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமைப் பொறியாளரின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 20308/2018/டிஒ2, நாள். 24.08.2018 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளுக்கு 27.09.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 27.09.2018 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 27.09.2018 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் |
| 2 | திரு. ஆர். சபீர்அலி, அரசு ஒப்பந்ததாரர், 9/16, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 01.10.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 % அதிகம் |
| 2 | திரு. ஆர். சபீர்அலி, அரசு ஒப்பந்ததாரர், 9/16, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 12.19 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.98% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16 ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் 625 516 ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.99% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 08.10.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.99% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16 ஏ.எம். சர்ச் தெரு, கம்பம் 625 516ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2322/2018/சி–1/இ1)

**6.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 12981/2018/இ3 நாள். 31.07.2018 ன் படி, இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் (TURIP) திட்டம் 2018–19 –இன் கீழ் தார் சாலை, பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்திட சிப்பம்–2க்கு **ரூ.250.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| **சிப்பம் எண்** | **பணிகளின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| II | வார்டு எண். 1 கோம்பை ரோடு குறுக்கு சந்து, வா.எண். 3 எல்.எப். ரோடு பெட்ரோல் பங்க் வடக்குச் சந்து, உலகத்தேவர் 8வது சந்து, வா.எண்.20 வேலப்பர் கோவில் தெரு, வா.எண்.9 சுப்பிரமணிய சாமி நகர், வா.எண்.28 சுருளிப்பட்டி ரோடு மற்றும் வா.எண். 31 நந்தகோபால் நகர் தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல் | 250.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நகர்மன்றத்தீர்மானம் எண். 1531, நாள்.29.06.2018 ன்படி, மன்ற அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமைப் பொறியாளரின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 20308/2018/டிஒ2, நாள். 24.08.2018 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளுக்கு 27.09.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 27.09.2018 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 27.09.2018 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு ஜி.எம்.மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம். |
| 2 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 01.10.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஜி.எம்.மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.97 % அதிகம் |
| 2 | திருவாளர்கள் ஏ.பி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், 31, 33/16, ஏ.எம் சர்ச் தெரு, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 9.00 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.98% சதவிகி கூடுதலில் குறைவாக வழங்கிய திரு. ஜி.எம்.மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 6 கிராமசாவடி தெரு, கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததா மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலு ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.97% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது எ 08.10.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.97% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு. ஜி.எம்.மணிகண்டன் (எ) எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 60, கிராமசாவடி தெரு, கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2322/2018(சி–2)/இ1)

| | |
|---|---|
| **7.** | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 12981/2018/இ3 நாள். 31.07.2018 ன் படி, இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் (TURIP) திட்டம் 2018–19 –இன் கீழ் தார் சாலை, பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்திட சிப்பம்–3க்கு **ரூ.250.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. |

| சிப்பம் எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| III | வார்டு எண்.1 கோம்பை ரோடு குறுக்கு தெரு, வா. எண். 3 எல்.எப். ரோடு குறுக்கு தெரு, உலகத்தேவர்1வது சந்து, வா.எண்.4 மாலையம்மாள் புரம் பி.எஸ்.என்.எல் அலுவலக சாலை, பேருந்து நிலையம் (கருப்பத்தேவர் பர்னிச்சர் மார்ட்) முதல் கே.கே.பட்டி சாலை வரை, வா.எண். 18ஓடைக்கரைத் தெரு, வா.எண்.28 சுருளிப்பட்டி மெயின் ரோடு, வா.எண். 25 டி.எஸ்.கே. நகர், வா.எண். 29 ரேஞ்சர்ஆபிஸ் ரோடு, மற்றும் வார்டு எண். 31 நந்தகோபால நகர், சுக்காங்கல் பட்டி குறுக்குத் தெரு, சி.எம்.எஸ் நகர் குறுக்குத் தெரு மற்றும் வா.எண். 33 ஏகலுத்து குறுக்கு தெருக்களில் தார்தளம், பேவர்பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் செய்தல் | 250.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நகர்மன்றத்தீர்மானம் எண். 1531, நாள்.29.06.2018 ன்படி, மன்ற அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமைப் பொறியாளரின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 20308/2018/டிஒ2, நாள். 24.08.2018 ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளுக்கு 27.09.2018 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 27.09.2018 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் 27.09.2018 அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் (TechnicalBid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது அதன் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திரு டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். |
| 2 | திரு ஆர்.பரமானந்தம், **4/84**, நடுத் தெரு, பரமதேவன் பட்டி, முத்துலாபுரம் (அ), உத்தமபாளையம், (தா), தேனி மாவட்டம். |

தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 01.10.2018 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 % அதிகம் |
| 2 | திரு ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர், **4/84**, நடுத் தெரு, பரமதேவன் பட்டி, முத்துலாபுரம் (அ), உத்தமபாளையம், (தா), தேனி மாவட்டம். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.73 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.98% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.98% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 08.10.2018ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இதில் 4.98% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திரு. டி.தமிழ்ராஜன், ஒப்பந்ததாரர், பாப்பம்மாள் புரம், ஆண்டிப்பட்டி 625512 தேனி மாவட்டம். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் பரிசீலினைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.2322/2018(சி–3)/இ1

**8.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1584, நாள். 31.08.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 08.10.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.** | **கூடுதல் %** | **குறைவு %** |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி 2018–2019</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆங்கூர் பாளையம் ரோட்டில் அமைந்துள்ள பழைய குப்பை கிடங்கில் புதிதாக நுண்உர செயலாக்க மையம் அமைக்கப்படவுள்ளதால் ஏற்கனவே உள்ள குப்பைகளை அள்ளி இடமாற்றம் செய்யும் பணி | 3,00,000/– | ஜி.எம். மணிகண்டன் (எ) சுப்பிரமணியன் | – | 0.05 |
| | | | வி. கிருஷ்ணன் | 0.90 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. ஜி.எம். மணிகண்டன் (எ) சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.05 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1938–8/2018/இ1)

**9.** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் வாரச்சந்தை அருகில் நுண்உர செயலாக்க மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ரூ. 47.00 மதிப்பீடிலும், மற்றும் ஆங்கூர்பாளையத்தில் நுண்உர செயலாக்க மையம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்காணும் இடங்களில் நுண்உர செயலாக்க மையம் கட்டிடம் கட்டும் பணியிடத்தில் மண்ணின் உறுதி தன்மை அறியும் பொருட்டு அரசு பொறியியல் கல்லூரி, போடிநாயக்கனூர் மூலமாக மண் பரிசோதனை செய்திடவும் அதற்கான கட்டணம் ரூ.42,480/– (ரூபாய் நாற்பத்து இரண்டாயிரத்து நானூற்று எண்பது மட்டும் )க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1260–3/2018/இ1)**

**10.** கம்பம் நகராட்சி 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 69183 மக்கள் தொகையையும், 18962 குடும்பங்களையும், வார்டுகள்– 33, தெருக்கள் – 183, வணிக நிறுவனங்கள்– 2163, வரிவிதிப்பு எண்கள் மொத்தம் – 18064 மொத்த பரப்பளவு 6.58 ச.மீ உள்ளது.

இந்நகராட்சியில் வாரச்சந்தை மற்றும் உழவர் சந்தை ஆகியவை நல்லமுறையில் இயங்கி வருகிறது. இந்நகரம் கேரளா மாநிலத்திற்கு அருகிலும், சுற்றியுள்ள கிராமங்களுக்கு மத்தியிலும் இருப்பதால், தினமும் 10,000 பேர் பொருள்கள் வாங்கி கொண்டும், வியாபாரம் செய்தும் செல்கின்றனர். இதனால் அதிக அளவில் திடக்கழிவுகள் உருவாகிறது.

தற்போது இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் நகரின் குடியிருப்புகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப, பொது சுகாதாரப்பணிகளை மேற்கொள்வதற்கு, போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லை. திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–இல் கண்டுள்ளபடி, வீடு வீடாக சென்று திடக்கழிவுகளை பிரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து சேகரிக்கவும், உரக்கிடங்கில் Processing Unit மூலம் திடக்கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கவும், மண்புழு உரம் தயாரிக்கவும் , தற்போது நகரின் மூன்று இடங்களில் நுண் உர செயலாக்க மையங்கள் (Micro Compost Center) அமைக்கவுள்ள நிலையில் அதற்கான துப்புரவு பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை கருத்தில் கொண்டு அரசாணை எண்.101 நாள்.30.04.1997–இன்படி தேவைப்படும் பற்றாக்குறை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தனியாரிடம் ஒப்பந்த முறையில் பெற வேண்டிய அவசிய நிலை உள்ளது.

**தற்போதைய துப்புரவு பணியாளர்களின் நிலை**:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் | : | 135 பேர் |
| அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | : | 68 பேர் |
| தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் | : | 107பேர் |

**<u>அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:30.04.1997–இன்படி தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்கள் விவரம்:</u>**

| | |
|---|---|
| 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த வீடுகளின் எண்ணிக்கை18962–க்கு 250 குடும்பங்களுக்கு 3 பணியாளர்களை கொண்ட குழு வீதம் தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | $\frac{18962}{250} \times 3 = 227$ து.ப |

| | |
|---|---|
| டிப்பர் லாரி பெரியது | 4 து.ப |
| டிப்பர் லாரி பெரியது | 3 து.ப |
| உரக்கிடங்கு பராமரிப்பு | 2 து.ப |
| கழிவுநீர் வண்டி | 2 து.ப |
| புதிய பஸ்நிலைய கழிப்பறை (இலவச கழிப்பறை) | 2 து.ப |
| புதிய பஸ்நிலைய பராமரிப்பு | 2 து.ப |
| **மொத்தம்** | **242 து.ப** |

**<u>தற்போது பணியாளர்கள் விபரம் –</u>**

**நிரந்தர பணியாளர்கள் – 68 பேர்**
**தனியார் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் – 107 பேர்**

**------**

**175 பேர்**

**------**

அரசாணை (நிலை) 101–இன்படி மேலும்
தேவைப்படும் பணியாளர் பணியிடம் : 242 – 175 = 67

தேவைப்படும் துப்புரவு பணியாளர் பணியிடம் – 67 பேர் ஆகும்

**<u>அரசாணை (நிலை) எண்.101–இன்படி தேவைப்படும் 67 பணியாளர்களை நிரந்தர பணியாளர்களாக நியமனம் செய்தால் ஏற்படும் செலவினம் கீழ்கண்டவாறு:</u>**
ஒரு துப்புரவு பணியாளருக்கு **4800 + 1300 + 10000** வீதம் நியமனம் செய்தால் **1** நாள் சம்பளம் **497** வீதம்

**30** நாட்களுக்கு 30 x 497 x 67 = ரூ. 9,98,970/–
**365** நாட்களுக்கு 365 x 497 x 67 = ரூ. 1,21,54,135/– ஆகும்.

**<u>தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விலை நிர்ணய தினக்கூலி அடிப்படையில் 67 நபர்களை பணியில் ஈடுபடுத்தினால் ஏற்படும் செலவினம் கீழ்கண்டவாறு:</u>**

| | |
|---|---|
| 1 நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 330 வீதம் மாதம் ஒன்றுக்கு (365 x 330 x 67) | 8070150 |
| தொழிலாளர் சேமநலநிதி ஊதியத் தொகையில் 13.61 சதவீதம் | 1098347 |
| தொழிலாளர் ஆயுள் காப்பீடு ஊதியத் தொகையில் 4.75 சதவீதம் | 383332 |
| சீருடை ஒரு நபருக்கு ரூ.2400/– வீதம் ஒரு வருடத்திற்கு (67 x 2400 ) | 160800 |
| பாதுகாப்பு உபகரணங்கள் ஒரு நபருக்கு ரூ.3600 வீதம் ஒரு வருடத்திற்கு | 241200 |
| நிர்வாக செலவினம் ஊதிய தொகையில் 10 சதவீதம் | 807015 |
| | 10760844 |

தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் **67** நபர்களை நியமனம் செய்தால் நகராட்சிக்கு மிச்சமாகும் தொகை ரூ. 12154135 – 10760844/- =ரூ.1393291/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து மூவாயிரத்து இருநூாற்றி தொண்ணுாற்றி ஒன்று மட்டும்) ஆண்டு ஒன்றிற்கு மிச்சமாகும்.

ஆகவே அரசாணை (நிலை) எண் 101–இன்படி இந்நகராட்சியில் 67 துப்புரவு பணியாளர்களை, பொது சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவரின் விலை நிர்ணய விகித அடிப்படையில் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினங்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மேற்படி திட்டம் செயல்படுத்துவதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம். <br> 2) திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன்படி திடக்கழிவுகளை வீடுகளிலேயே பிரித்து சேகரித்து உரம் தயாரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பிரித்து சேகரிப்பதற்கும், இறுதியாக்கம் செய்யும் வரையிலான இதர பணிகளை செய்வதற்கும் ஏதுவாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி அரசாணை எண் 101–இல் கண்டுள்ளவாறு மேற்காணும் 67 பணியாளர்களை கூடுதலாக தனியாரிடம் பெற்று துப்புரவு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| **11.** | தனி அலுவலரின் முன் அனுமதியின்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 Z 3591 கழிவுநீர் ஊர்திக்கு **12.11.2018** உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், **11.10.2018–**ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 1,25,000/– |
| 2. | திரு S.முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>கம்பம். | 1.30,000/– |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 4156/2018/எச்1)** |
| **12.** | கம்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திறந்த வெளியில் மலம் கழித்தலால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளை களைதல், திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள், திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் இறுதியாக்கம் செய்தல் குறித்த விழிப்புணர்வு பணியினை செய்வதற்கு AMK-MAN Power Services நிறுவனம் மூலம் அனுப்பப்பட்டுள்ள பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளருக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.26458–1/2016/தி1, 31.07.2018–ஆம் தேதிய செயல்முறை உத்தரவில், மேற்காணும் பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி விதிப்படி, மேலும் மூன்று மாதங்களுக்கு (01.10.2018 – 31.12.2018) கால நீட்டிப்பு செய்துள்ளதாகவும், மேற்படி மாதங்களுக்கான ஊதியத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குமாறும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணியாளர்களுக்கு செப்டம்பர் 2018–ஆம் மாத ஊதியம் வழங்குவதற்கு தொகை ரூ.58,925/– 01.10.2018 முதல் 31.12.2018 முடிய 3 மாதங்களுக்குரிய ஊதியம் வழங்குவதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.4,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : **1)** மன்றம் அனுமதிக்கலாம். <br> 2) மேற்காணும் பணியாளர்களுக்கு 3 மாத ஊதியத்தினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |

**13.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு பழுதடைந்து, மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் கீழ்கண்ட பொருட்களை கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | தள்ளுவண்டிகள் | 69 |
| 2. | டம்பர் பிளேசர் கொள்கலன்கள் | 36 |
| 3. | பயன்படுத்தி பழுதடைந்த டயர்கள் | 58 |
| 4. | வாகனங்கள் மராமத்து பணிகள் செய்யப்பட்டபோது கழற்றப்பட்ட உதிரிபாகங்கள் | 50 கிலோ |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4386/2018/இ1)

**14.** கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தவிர்க்கும் பொருட்டு, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் DBC பணியாளர்கள் 63 நபர்கள் அந்திமல்லி மகளிர் குழு மூலம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.2571/2017/ஜே1, 28.11.2017–ஆம் தேதிய கடிதத்தில் வருடம் முழுவதும் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால், தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.8977/2016/இ2, 11.06.2018–இன்படி தினக்கூலி அடிப்படையில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.225/– வீதம் ஆகஸ்ட் 2018 முதல் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அந்திமல்லி மகளிர் குழுவிடம் 63 DBC பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1558, நாள்.31.07.2018–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில், மேற்கண்ட பணியாளர்களுக்கு EPF தொகை 13 சதவீதம் நகராட்சி மூலம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி 63 DBC பணியாளர்களுக்கு EPF தொகை 13 சதவீதம் (ஒரு மாதத்திற்கு ரூ.878 x 63 = ரூ.55,314/–வீதம் ) ஒரு வருடத்திற்கு 55,314 x 12 = ரூ.6,63,768/–ஐ நகராட்சி மூலம் செலுத்துவதற்கும் அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**15.** கம்பம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காகவும், கம்பம் நகரில் உள்ள பொதுமக்கள், அனைத்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்காக அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TAMPCOL நிறுவனத்திடம் **300** கிலோ நிலவேம்பு குடிநீர் சூரணம் வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.**1,50,000/–**க்கும்(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று **300** கிலோ நிலவேம்பு குடிநீர் சூரணப்பொடி தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TAMPCOL நிறுவனத்திடம் கொள்முதல் செய்வதற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 16. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வீடுவீடாக சென்று புகைமருந்து அடிக்கும் சிறிய புகை தெளிப்பான் (Mini Fogging Machine) 10 எண்ணம் பழுதடைந்துள்ளது. தற்போது மழைக்காலம் தொடங்கி டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால் வீடுவீடாக சென்று புகை மருந்து அடிக்கும் பணி துவங்க இருப்பதால், மேற்காணும் 10 எண்ணம் சிறிய புகை தெளிப்பான்களை (Mini Fogging Machine) பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு.. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி, நோய் தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 4268/2018/எச்1)** |

**ஒப்பம்/— திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 12.10.2018**
**இடம். கம்பம்**